## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி

## அ.வ.எண்.10/2017

இந்நீதிமன்றத்து எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10 வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2024 ஆண்டு டிசம்பர் மாதம் 02 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : மகேஷ் குமார் | மதம் | : இந்து |
| த/பெ | : கௌதம் சாந்த் | ஜாதி | : -- |
| வயது | : 45 | கிராமம் | : திருத்தணி |
| தொழில் | : நகை கடை | வட்டம் | : திருத்தணி |

**02.12.2024**

**வா.சா. 1 ன் முதல் விசாரணை**

**1.** நான் இவ்வழக்கில் வாதி ஆவேன். வாதி தரப்பு 1ம் சாட்சியாக சாட்சியம் அளிக்கிறேன். என் தரப்பில் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். எனது பிரமாண வாக்குமூலத்தை நான் சொல்லித்தான் என்னுடைய வழக்கறிஞர் பிரமாண வாக்குமூலத்தை தயார் செய்தார். அதில் உள்ள விவரங்கள் எனக்கு நன்குத் தெரியும். பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். 21.01.1998ம் தேதியிட்டு தயாளன் எனக்கு எழுதி கொடுத்த பதிவு செய்த கிரைய ஆவணம் அசல் தாக்கல் செய்கிறேன்.**(கிரைய ஆவணம் வா.சா.ஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** 10.10.1968ம் தேதியிட்டு ஆறுமுகசாமி வகையறா சுப்பிரமணி முதலியாருக்கு எழுதி கொடுத்த கிரைய ஆவணம் அசல் தாக்கல் செய்கிறேன்.**(கிரைய ஆவணம் வா.சா.ஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

2. 18.07.1995ம் தேதியிட்ட கட்டிட வரைபட அனுபமதி அசல் தாக்கல் செய்கிறேன்.**(கட்டிட வரைபட அனுமதி வா.சா.ஆ 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** 08.05.1981ம் தேதியிட்ட கட்டிட வரைபட அனுபமதி அசல் தாக்கல் செய்கிறேன். **(கட்டிட வரைபட அனுமதி வா.சா.ஆ 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** இந்நீதிமன்ற அ.வ.எண்.3/2000 தீர்ப்பாணை சான்றிட்ட நகல் தாக்கல் செய்கிறேன்.**(தீர்ப்பாணை வா.சா.ஆ 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** இந்நீதிமன்ற அ.வ.எண்.3/2000 தீர்ப்புரை சான்றிட்ட நகல் தாக்கல் செய்கிறேன்.**(தீர்ப்புரை வா.சா.ஆ 6 ஆக குறியீடு**

**செய்யப்படுகிறது)** ஸ்ரீஜெய் கணேஷ் நகர் மாதிரி வரைபடம் (Layout) தாக்கல் செய்கிறேன்.**(மாதிரி வரைபடம் வா.சா.ஆ 7 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** பிராதுப்படி தீர்ப்பு செய்ய வேண்டுமாய் பிரார்த்திக்கிறேன்.

(குறுக்கு விசாரணை வழக்கறிஞர் வேண்டுகோளின்படி ஒத்திவைக்கப்படுகிறது)